**MCOP NO: 1199/2023** **DATE: 26.08.2025**

ம.சா :1

பெயர் : திருமதி. சாந்தி

த/பெ : திரு. பார்த்திபன்

வயது : 45

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 12 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் எனது மகன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார். எனது மகன் அமர்ந்து சென்ற வாகனத்தை ஓட்டிச்சென்றவர் அவரின் நண்பர் ஆவார், அவரின் பெயரை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. விபத்திற்கு பின்பு நான் வாகனத்தை ஓட்டிய அந்த நபரை பார்க்கவில்லை. ஆனால், விபத்திற்கு முன்பு பார்த்துள்ளேன். விபத்தின்போது விக்னேஷ் என்பவர் வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த விக்னேஷ் என்பவருக்கு விபத்தின்போது வயது என்ன என்பது எனக்கு தெரியாது. அந்த நபரை எனது மகனுக்கு எப்படி தெரியும் என்றால் பெரும்மூச்சு என்ற ஊரில் அவரின் வீட்டிற்கு அருகில் நாங்கள் வாடகைக்கு இருந்தபோது எனது மகனுக்கும், அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. அந்த விக்னேஷ்க்கு உண்டான ஓட்டுநர் உரிமத்தையோ, அவருக்கு ஏற்பட்ட காயத்தின் விவரத்தை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுவில் காலம் எண் 16 (A)-ல் விக்னேஷ் என்பரின் ஓட்டுநர் உரிமம் பற்றி சொல்லப்படவில்லை. அவ்வாறு சொல்லாததற்கு காரணம் விபத்தின்போது அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பொறுத்து எனக்கு சொல்லத்தெரியாது. அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா, இல்லையா என்பது எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகன் பயணம் செய்த வாகனத்தை ஓட்டிய நபரிடமிருந்து அந்த வாகனத்திற்கு உண்டான பதிவுச் சான்று, காப்பீடு சான்று மற்றும் ஓட்டுநரின் உரிமம் ஆகியவற்றை நான் ஏன் அவரிடம் கேட்டு நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்றால் அவரை ஒரு முறை தான் பார்த்தேன் என்றாலும், அவர் தற்போது விலாசத்தில் இல்லை என்றாலும், அந்த ஆவணங்களை அவரிடம் பெற்று நான் தாக்கல் செய்ய முடியவில்லை. 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனமானது முதல் எதிர்மனுதாரருக்கும், அதன் ஓட்டுநருக்கும் அறிவிப்பு அனுப்பியதை அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளதால் அவர்கள் அந்த ஊரில் தான் இருக்கிறார்கள் என்றும், அதை மறைத்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் பயணம் செய்த வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் விபத்தின்போது அவருக்கு ஓட்டுநர் உரிமமானது நிலுவையில் இல்லை என்ற விவரம் தெரிய வந்து விடும் என்பதால் தான் நான் அதை பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைக்கு போதிய ஆவணம் இல்லை என்பதால் அவை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீங்கள் இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் 2 ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2-ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.